FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323725

1. District : மாவட்டம் தென்காசி | PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் | Year: ஆண்டு 2026 | FIR No.: முத.அ. எண் 14/2026 | Date: நாள் 26.10.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 20.05.2022 | Date to : நாள் வரை 23.10.2026
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.10.2026 | Time : நேரம் 14.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Block Development office, Keelapavoor @ Pavoorchatram. 10 Km East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரா.பரிமளா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.சீனிவாசன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.10.1975 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வீட்டாட்சியர் | (g) Address : முகவரி சமூக பாதுகாப்புதிட்டம், ஆலங்குளம் தாலுகா, தென்காசி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused.with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 திரு.T.பால் ராமச்சந்திரன், கணக்கர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், A-2 திருமதி.C.ரெஜினா, கணினி ஆபரேட்டர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், A-3 திரு.C.செந்தில் பாலமுருகன், ஓவர்சியர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், A-4 திரு.R.ஆறுமுகசாமி, ஓவர்சியர், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தென்காசி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளர்/ தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet,if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 26.10.2026-ம் தேதி பிற்பகல் 14.30 மணிக்கு M.பால் சுதர், துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது ஆலங்குளம் தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திருமதி.ரா.பரிமளா அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 23.10.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் ரா.பரிமளா, த/பெ சீனிவாசன், தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், ஆலங்குளம் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - ஊர்க வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை இருப்பு பாவூர்சத்திரம் 23.10.2026-ம் தேதி மாலை திடீர் இணை ஆய்வு செய்தபோது செயலிகள் மூலம் ரூ.2,94,000/-க்கு சந்தேகத்திற்குரிய பண பரிமாற்றம், நடைபெற்றதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் பல்வேறு திட்டம் தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் செயலிகள் மூலம் பணம் வசூல் செய்வதாக

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு. எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

26/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. PAUL SUTHER.
Rank: நிலை .....No. எண் .....
DSP. Vaagai, Tenkasi

கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி, தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் அவர்களுடன் இணைந்து கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை இருப்பு பாவூர்சத்திரம் 23.10.2026-ம் தேதி மாலை 15.10 மணியளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது கணக்கர் திரு.பால் ராமச்சந்திரனின் மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது ஆறுமுகம் காண்ட்ராக்டரிடமிருந்து அவருடைய 9043369050 எண்ணின் Phonepe செயலி மூலம் 06.10.2023-ம் தேதி 17.07.2024-ம் தேதி வரையில் ரூ.53,000/-மும், ஒப்பந்ததாரர் அப்சரா என்பவரிடமிருந்து 03.03.2025-ம் தேதி ரூ.3,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து கணக்கர் திரு.பால் ராமச்சந்திரனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி.ரெஜினாவின் மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அவருடைய 9790506288 எண்ணின் G-Pay செயலி மூலம் 09.07.2026-ம் தேதி முதல் 10.10.2026-ம் தேதி வரையில் ரூ.40,000/- பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி.ரெஜினாவிடம் கேட்டபோது contractor Stephen பணம் போட்டதாக தெரிவித்தார்.

ஓவர்சியர் திரு.செந்தில் பாலமுருகனின் மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அவருடைய 9488721024 எண்ணின் Phonepe செயலி மூலம் காண்ட்ராக்டர் செல்லத்துரையிடமிருந்து 16.08.2025-ம் தேதி ரூ.15,000/-மும், ராமர் என்பவரிடமிருந்து 24.02.2026-ம் தேதி ரூ.3,000/-மும், மணிகண்டன் என்பவரிடமிருந்து 13.10.2025-ம் தேதி ரூ.5,000/-மும் என மொத்தம் ரூ.23,000/- பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து ஓவர்சியர் திரு.செந்தில் பாலமுருகனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. ஓவர்சியர் திரு.ஆறுமுகசாமியின் மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அவருடைய 7402702350 எண்ணின் Phonepe செயலி மூலம் காண்ட்ராக்டர் டேவிட்டிடமிருந்து 27.12.2024-ம் தேதி ரூ.10,000/-மும், 13.03.2026-ம் தேதி ரூ.10,000/-மும், காண்ட்ராக்டர் பாரியிடமிருந்து 20.05.2022-ம் தேதி முதல் 26.10.2024-ம் தேதி வரை பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.1,55,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து ஓவர்சியர் திரு.ஆறுமுகசாமியிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை.

இந்த சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட ரூ.2,94,000/-க்கு செயலிகள் மூலம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடைபெற்ற பண பரிமாற்றமானது ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு ஓவர்சியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு செயலி மூலம் அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான

செயல்முறை நடவடிக்கை 23.10.2026 மாலை 15.10 மணிக்கு ஆரம்பித்து இரவு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சோதனையின்போது இருந்த கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கணக்கர் திரு.T.பால்ராமச்சந்திரன், கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் திருமதி.C.ரெஜினா, ஓவர்சியர்கள் திரு.C.செந்தில் பாலமுருகன், திரு.R.ஆறுமுக்சாமி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd.26.10.2026, (திருமதி.ரா.பரிமளா), தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், ஆலங்குளம் வட்டம். Sir, Received the complaint on 26.10.2026 at 14.30 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.14/2026 u/s 7 of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 26.10.2026 at 15.30 hrs Sd. 26.10.2026, M.Paul Suther, DSP, V&AC, Tenkasi.

23.10.2026-ம் தேதி தென்காசி – திருநெல்வேலி ரோட்டில் பாவூர்சத்திரம் சுசிலா மருத்துவமனைக்கு எதிரே அமைந்துள்ள கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் ஆலங்குளம் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திருமதி.ரா.பரிமளா அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : திருமதி.ரா.பரிமளா, துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி. தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், ஆலங்குளம், தென்காசி மாவட்டம். திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. இன்று 23.10.2026-ம் தேதி பிற்பகல் 13.00 மணிக்கு கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் பல்வேறு திட்டம் தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் செயலி மூலம் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் ஆலங்குளம் தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திருமதி.ரா.பரிமளா அவர்கள் தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 14.45 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995-ல் புறப்பட்டு இராமச்சந்திரபட்டணம் வழியாக வந்து சுமார் 15.10 மணிக்கு பாவூர்சத்திரத்தில் சுசிலா மருத்துவமனைக்கு எதிரே தெற்கு நோக்கி அமைந்துள்ள கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவகத்தின் போர்டிகோவிற்கு வந்து மெயின் வாசல் வழியாக தரைதளத்தில் உள்ளே வந்தபோது, வாசலுக்கு கீழ்புறம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறை உள்ளது. மேற்படி அறையை பார்த்தபோது பூட்டப்பட்டு இருந்தது. மேற்படி அறைக்கு வடபுற்ம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம

ஊராட்சி) அலுவலக அறை உள்ளது. மேற்படி அறையில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) திருமதி.சங்கீதா என்பவர் இருந்தார். அவரிடம் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள ஆலங்குளம் சமூக பாதுகாப்பு திட்ட துனி வட்டாட்சியர் திருமதி.பரிமளா தன்னையும், தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அவரிடம் வட்டார வளர்ச்சி அலுவலரை பற்றி கேட்டபோது அவர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.பத்மா, திரு.இராதாகிருஷ்ணன் மற்றும் பொறியாளர்கள் மதுரை மண்டல மீட்டிங்கிற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். திருமதி.சங்கீதாவிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய கைபையில் இருந்து ரூ.100/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் ரூ.5100/- என பதிவு செய்திருந்தார். மேற்படி பணத்தை கேட்டபோது அவர் தான் கொண்டு வந்த பணத்தில் தனது கணவர் குருவாயூர் சென்றதால் அவரிடம் மதியம் ரூ.5000/- கொடுத்தது போக மீதம் ரூ.100/- வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் அந்த பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

கணக்கர் திரு.பால் ராமச்சந்திரனிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய பர்சில் இருந்து ரூ.10/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் பதிவு ஏதும் செய்யவில்லை. இதுகுறித்து திரு.பால் ராமச்சந்திரனிடம் கேட்டபோது அவர் குறைவாக பணம் இருந்ததால் பதிவு செய்யவில்லை என்றும் அந்தபணம் சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். அதனால் மேற்படி பணத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த VIVO V25 (Sl.No.15962731050004x) மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9043369050 என்ற சிம் இருந்தது. மேற்படி 9043369050 எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது Arumugam contractor என்று பதிவு செய்திருந்த 9842799035 என்ற எண்ணில் இருந்து 06.10.2023-ம் தேதி ரூ.10,000/-, 17.11.2023-ம் தேதி ரூ.8,000/-, 14.03.2024-ம் தேதி ரூ.5,000/-, 17.07.2024-ம் தேதி ரூ.30,000/- என மொத்தம் ரூ.53,000/-மும், ஒப்பந்ததாரர் அப்சரா என்பவரின் செல்போன் எண் 9047561505 என்ற எண்ணிலிருந்து 03.03.2025-ம் தேதி ரூ.3,000/-மும் பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து கணக்கர் திரு.பால் ராமச்சந்திரனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி அறையில் இருந்த உதவியாளர் திருமதி.கார்த்திகா, திரு.அருள்முருகன், திரு.இருதயராஜ், துண்ண வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) திரு.ஆறுமுகம், சத்துணவு அமைப்பாளர் திருமதி.தங்கம்மணி, செல்வி.துர்கா, திருமதி.மல்லிகா, தட்டச்சர் திருமதி.மாணிக்க செல்வி ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது

கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி அலுவலக அறைக்கு வடபுறம் ஆடிட் அறை, மீட்டிங் ஹால், கழிப்பறையும் உள்ளது. தரைதளத்தின் மேல்பக்கம் கூட்ட அரங்கு, பதிவறை, சேர்மன் அறை ஆகியவை உள்ளது.

மெயின் வாசல் எதிரே முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது. முதல் மாடியில் மேற்புறம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறை உள்ளது. அதன் வடபுறம் கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலரின் அலுவலகம் உள்ளது. அதன் உள்ளே வந்தபோது வாசல் அருகே பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) திரு.சுல்தான் அலாவுதீன் என்பவர் இருந்தார். அவரிடம் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள ஆலங்குளம் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திருமதி.பரிமளா தன்னையும், தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். திரு.சுல்தான் அலாவுதீனிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.400/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் ரூ.510/- என பதிவு செய்திருந்தார். மேற்படி பணத்தை கேட்டபோது அவர் தான் கொண்டு வந்த பணத்தில் மதியம் செலவு செய்தது போக மீதம் ரூ.400/- வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி.ரெஜினாவிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய கைபையில் இருந்து ரூ.40/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது சரியாக இருந்ததால் மேற்படி பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த VIVO V2307 (Sl.No.10BDAYIRS4000BA) மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9790506288 என்ற சிம் இருந்தது. மேற்படி 9790506288 எண்ணிற்கான G-Pay செயலியை பார்த்தபோது 9944735301 என்ற எண்ணில் இருந்து 09.07.2026-ம் தேதி ரூ.5,000/-, 02.10.2026-ம் தேதி ரூ.20,000/-, 10.10.2026-ம் தேதி ரூ.15,000/-, ஆக மொத்தம் ரூ.40,000/- பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திருமதி.ரெஜினாவிடம் கேட்டபோது contractor Stephen தனக்கு பணம் போட்டுள்ளதாக சொன்னார். மேலும் மேற்படி அறையில் இருந்து திரு.செந்தூர் பாண்டியன், உதவியாளர் (SBM Audit), உதவியாளர் திருமதி.ராஜேஷ்வரி, திரு.வேல்முருகன், சமூக நல அலுவலர்கள் திரு.மாரியப்பன், திரு.முகமது ரபீக், கணினி ஆபரேட்டர்கள் திரு.பிரவீன் தனபால், செல்வி.தனுஷியா, திருமதி.ராதா ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம். ஏதும் இல்லை.

முதல் தளத்தின் கீழ்புறம் பெற்றியியல் பிரிவு உள்ளது. மேற்படி பொறியியல் பிரிவில் ஓவர்சியர் திரு.செந்தில் பாலமுருகனிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.1,620/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் பதிவு ஏதும் செய்யவில்லை. இதுகுறித்து திரு.செந்தில் பாலமுருகனிடம் கேட்டபோது அவர் தான் அலுவலகத்திற்கு சற்றுமுன்தான் வந்ததால் பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி பணம் தனது செல்வுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.1,620/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த OPPO F29 Pro 5G (Model:CPH2705) மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9488721024, 9688051666 என்ற இரண்டு சிம் இருந்தது. மேற்படி 9488721024 எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது contractor Chelladurai என்று பதிவு செய்திருந்த 8489953833 என்ற எண்ணில் இருந்து 16.08.2025-ம் தேதி ரூ.15,000/-, ராமர் என்பவரின் செல்போன் எண் 8838734267 என்ற எண்ணிலிருந்து 24.02.2026-ம் தேதி ரூ.3,000/-, மணிகண்டன் என்பவரின் செல்போன் எண் 8754260802 என்ற எண்ணிலிருந்து 13.10.2025-ம் தேதி ரூ.5,000/- பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து ஓவர்சியர் திரு.செந்தில் பாலமுருகனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை.

ஓவர்சியர் திரு.ஆறுமுகசாமியிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.320/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் பதிவு ஏதும் செய்யவில்லை. இதுகுறித்து திரு.ஆறுமுகசாமியிடம் கேட்டபோது அவர் தான் அலுவலகத்திற்கு சற்றுமுன்தான் வந்ததால் பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி பணம் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.320/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த Infinix Note 30 5G (Model:Infinix X6711) மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 7402702350 என்ற சிம் இருந்தது. மேற்படி 7402702350 எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது contractor Tavit என்று பதிவு செய்திருந்த 9787626866 என்ற எண்ணில் இருந்து 27.12.2024-ம் தேதி ரூ.10,000/-மும், 13.03.2026-ம் தேதி ரூ.10,000/-மும், contractor Pari என்று பதிவு செய்திருந்த 9566296108 என்ற எண்ணில் இருந்து 20.05.2022-ம் தேதி முதல் 26.10.2024-ம் தேதி வரை பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.1,55,000/- பெற்றுள்ளார். மேற்படி பணம் பெற்றது குறித்து ஓவர்சியர் திரு.ஆறுமுக சாமியிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை.

மேலும் மேற்படி பொறியியல் பிரிவில் இருந்த திரு.ஆறுமுகசாமி, செல்வி.ஜெனி ஷெர்லின், தொழில் நுட்ப உதவியாளர் திருமதி.பாக்கியலட்சுமி ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. பொறியியல் பிரிவுக்கு வடபுறம் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அலுவலக கணினி அறை உள்ளது. மேற்படி அறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சந்திரன், இளநிலை உதவியாளர் திருமதி.ஹதிஜா பேகம், கணினி ஆபரேட்டர்கள் திரு.முகைதீன் அப்துல் காதர், திருமதி.சுபிதர் ராணி, திருமதி.சைலேந்திர தேவி, திருமதி.மாரியம்மாள் ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. இந்த சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட மொத்த பண பரிவர்த்தனையான ரூ.2,94,000/-க்கான முறைகேடான பண பரிவர்த்தனைகள் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு ஒவர்சியர்கள், கணக்கர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு செயலி மூலம் அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (23.10.2026) பிற்பகல் 15.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம்.23.10.2026. திருமதி.பரிமளா, தனிவட்டாட்சியர், (ச.பா.தி), ஆலங்குளம், ஓம்.மற்றும் சிலர்.

The original complaint, Proceedings dated 23.10.2026 of Special Tahsildar, Social Security Scheme, Alangulam Taluk, Tenkasi District and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge, Tenkasi and copies sent to concerned higher officials.

23/10/2026

M. Ravichandher.

DSP. Vasagam

Tenkasi.